OS.No.131/2015

Dated : 16.11.2022.

Time: 11.45 a.m. To 11.53 a.m.

P.W.2 - கலைமணி 2 சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு

**3**ம் பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை

1. நான் 1ம் வாதி அழைத்தின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வாதிகளின் வீட்டு அருகே வசித்து வருகிறேன். 3ம் பிரதிவாதியை தெரியும். கணேசன் என்பவரை ஈஸ்வரி என்பதை முதல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். மேற்படி திருமணம் நிலுவையில் இருக்கும் போது அவர் 1ம் பிரதிவாதியை 2வதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியும். வழக்கு சொத்து கணேசனுக்கு பூர்வீக சொத்து என்றால் அவருக்கு பாகமாக வந்த சொத்து.

2. தாவாசொத்து சம்மந்தமாக 2015 ல் பைசல் செய்யப்பட்டது. அது சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி பைசல் பேசப்பட்ட சொத்துக்களின் சர்வே எண். மற்றும் விஸ்தீரணம் தெரியாது. வாதிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அதற்கு ஈடாக பரிவர்த்தனை செய்துகொண்டார் என்றால் அவ்வாறு இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd- K.Ananthan,**

**Subordinate Judge,**
**Attur.**